https://snapfrom.com/ https://instagramvideodownloader.net/ https://instadl.app/

நிலஅளவை–பதிவேடுகள் துறையில் 14 ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வு

சென்னை, ஜூலை 24: நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறையில் 14 ஆய்வாளர்களுக்கு, உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறையில் பதவி உயர்வு அளிக்கும் போது, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை பின்பற்ற வேண்டுமென உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் படி, நில அளவை மற்றும் பதிவேடுகள் துறையில் 2004 முதல் 2021-ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்ட உதவி இயக்குநர் பதவி உயர்வு பட்டியல்களில் பணிமூப்பில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டன.

அதன்படி, ஆய்வாளர்களாகப் பணிபுரிந்த 3 பேருக்கு உதவி இயக்குநராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு உத்தரவுகள் வெளியிடப்பட்டன.

மேலும், 2022-ஆம் ஆண்டுக்கான காலிப் பணியிடங்களுக்கு, ஆய்வாளர்களாக பணிபுரியும் 14 பேருக்கு உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என தமிழக அரசு சார்பில் திங்கள்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டியலின இளைஞரை அவமதிப்பு செய்தவர் கைது: திமுக நிர்வாகி உள்பட 30 பேர் மீது வழக்குப் பதிவு

அரியலூர், ஜூலை 24: அரியலூர் மாவட்டம், செந்துறை அருகே பட்டியலின சமூகத்தைச் சேர்ந்தவரை காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வைத்தது தொடர்பாக இளைஞரை காவல் துறையினர் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்தனர்.

மேலும், இதுதொடர்பாக திமுக நிர்வாகி உள்பட 30 பேர் மீது காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

செந்துறையை அடுத்த வாளரகுறிச்சி, ஆதிதிராவிடர் தெருவைச் சேர்ந்தவர் அன்பரசன் (34). பாஜக ஒன்றிய பொதுச் செயலாளரான இவர், கடந்த 7-ஆம் தேதி தனது மகளுக்கு மஞ்சள் நீராட்டு விழா நடத்தினார்.

இதை முன்னிட்டு சீர்வரிசை எடுத்து வந்த அவரது உறவினர்கள், அங்குள்ள மாற்றுச் சமூகத்தினர் வசிக்கும் தெருவில் பட்டாசு வெடித்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், கடந்த 9ஆம் தேதி மாற்றுச் சமூகத்தினர் வசிக்கும் தெருவுக்கு வந்த அன்பரசனை அழைத்த திமுக கிளைச் செயலர் கண்ணன் (48), அதே கிராமத்தை சேர்ந்த ராஜேஷ் (27) உள்ளிட்ட 10 பேர், எங்கள் தெரு வழியாக இதுபோல் இனி வெடிவெடித்துக் கொண்டு சீர்வரிசை எடுத்து செல்லக் கூடாது என மிரட்டினார்களாம்.

இதுகுறித்து தகவலறிந்து தட்டிக்கேட்ட அன்பரசனின் சகோதரர் திருநாவுக்கரசுக்கும் (32), மேற்கண்ட நபர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இதையறிந்த இரும்புலிக்குறிச்சி காவல் துறையினர், இருதரப்பினரையும் காவல் நிலையம் வர அழைப்பு விடுத்தனராம்.

இதனிடையே, இருதரப்பையும் சேர்ந்த சிலர் சமாதானம் பேசியதாகவும், அப்போது திருநாவுக்கரசை அனைவரின் முன்னிலையிலும் காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வைத்ததாகவும் கூறப்படுகிறது. தொடர்ந்து, இருதரப்பினரும் காவல் நிலையம் சென்று சமாதானம் செய்து கொண்டார்களாம். காவல்துறையினரும் அவர்களிடம் எழுதி வாங்கிக் கொண்டு அனுப்பிவைத்ததாக தெரிகிறது.

காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வைத்த சம்பவம் தொடர்பாக தனது முகநூலில் திருநாவுக்கரசு அண்மையில் பதிவிட்டதையடுத்து, அன்பரசனை அழைத்த காவல் துறையினர், சம்பவம் தொடர்பாக சனிக்கிழமை புகார் பெற்று வழக்குப் பதிந்தனர்.

புகாரின் பேரில், ராஜேஷை ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்த காவல் துறையினர், திமுக கிளைச் செயலர் கண்ணன் உள்ளிட்ட 30 பேர் மீது வழக்குப் பதிந்து அவர்களை தேடி வருகின்றனர். இதுதொடர்பாக திருநாவுக்கரசு , தமிழக ஆளுநர், பிரதமர், குடியரசுத் தலைவர் ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆலோசனை...

சென்னை தலைமைச் செயலகத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவுக்கான 'நவீன தமிழ்நாட்டின் சிற்பி- கலைஞர் எனும் குழுவின் ஆலோசனைக் கூட்டம். உடன் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, பொதுப்பணித் துறை அரசு முதன்மைச் செயலர் பி.சந்திரமோகன் உள்ளிட்டோர்.

யாருடன் தேமுதிக கூட்டணி?: விஜயகாந்த் விரைவில் அறிவிப்பார்

பிரேமலதா

சென்னை, ஜூலை 24: மக்களவைத் தேர்தலில் தேமுதிக யாருடன் கூட்டணி என்பது குறித்து விஜயகாந்த் விரைவில் அறிவிப்பார் என்று அந்தக் கட்சியின் பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் கூறினார்.

தேமுதிக மாவட்டச் செயலர்கள் கூட்டம் சென்னை கோயம்பேட்டில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்த பிரேமலதா விஜயகாந்த், செய்தியாளர்களிடம் கூறியதாவது:

லஞ்ச ஊழலில் கைது செய்யப்பட்டவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்பது தான் தேமுதிக நிலைப்பாடு. ஒட்டுமொத்த திமுகவும் செந்தில்பாலாஜிக்கு பாதுகாப்பு அளிக்கிறது என்றால், அவர் மூலம் அக்கட்சியினர் பலன் அடைந்துள்ளனர் என்பது தெரிகிறது. காவேரி மருத்துவமனையில் என்ன நடந்தது என்பது குறித்து திமுக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

மக்களவைத் தேர்தலில் யாருடன் கூட்டணி என்பதை விஜயகாந்த் விரைவில் அறிவிப்பார். தேசியஜனநாயகக்கூட்டணிகூட்டத்துக்கு தேமுதிகவுக்கு அழைப்பு இல்லை என்று கூறக்கூடாது.

நாங்கள் ஏற்கெனவே எந்தக் கூட்டணியிலும் இல்லை என்று அறிவித்துள்ளோம். பிறகு எப்படி எங்களை அவர்கள் கூட்டத்துக்கு அழைக்க முடியும்?

அரசியலுக்கு விஜய் வருகிறாரா, இல்லையா என்பதை அவர்தான் தெளிவுபடுத்த வேண்டும். மேலும், உதவிகள் செய்வதால் மட்டும் அரசியலில் விஜயகாந்த்தாக தன்னை கருதி, அவர் வளர முடியுமா என்றால் அதன் விளைவு வேறு மாதிரியாகத்தான் இருக்கும் என்றார்.

மகளிர் உரிமைத் தொகையை ஏற்கெனவே அறிவித்தவாறு, குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில், கட்சியின் மாநில துணைச் செயலர்கள் எல்.கே.சுதீஷ், பார்த்தசாரதி மற்றும் மாவட்டச் செயலர்கள் பங்கேற்றனர்.

ஆக.1-இல் ஓபிஎஸ் போராட்டம்: டிடிவி தினகரனும் பங்கேற்கிறார்

சென்னை, ஜூலை 24: கொடநாடு விவகாரத்தில் உண்மை குற்றவாளிகளைக் கைது செய்ய தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து ஆக. 1-இல் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ள போராட்டத்தில் அமமுக பொதுச் செயலர் டிடிவி தினகரனும் பங்கேற்கவுள்ளார்.

முன்னாள் முதல்வர் மறைந்த ஜெயலலிதாவின் கொடநாடு பங்களாவில் நிகழ்ந்த கொலை, கொள்ளை வழக்கில் உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்ய தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து, தேனியில் ஆகஸ்ட் 1-இல் போராட்டம் நடைபெறும் என்று ஓ.பன்னீர் செல்வம் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், இந்த போராட்டத்தில் ஓ.பன்னீர்செல்வத்துடன் இணைந்து டிடிவி தினகரனும் பங்கேற்கவுள்ளார் என்று அமமுக சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிமுகவை மீட்டெடுப்பதற்கான முயற்சியில் இணைந்து செயல்படவுள்ளதாக இருவரும் ஏற்கெனவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

நீதிமன்றங்களில் அம்பேத்கர் படத்தை அகற்ற உத்தரவிடவில்லை

தலைமை நீதிபதி விளக்கம்

சென்னை, ஜூலை 24: நீதிமன்றங்களில் அம்பேத்கர் உள்ளிட்ட எந்த தலைவர்களின் புகைப்படத்தையும் அகற்ற உத்தரவிடப்படவில்லை என சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சுங்காபுர் வாலா தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழக அரசு சார்பில் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நீதிமன்றங்களில் அம்பேத்கர் புகைப்படம் அகற்றப்படவுள்ளதாக செய்தி பரவியதைத் தொடர்ந்து, முதல்வர் மு.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி சுங்காபுர்வாலாவை சந்தித்து இந்த விவகாரம் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

தலைமை நீதிபதியிடம் அம்பேத்கர் புகைப்படம் அகற்றப்படக் கூடாது என்ற தமிழக அரசின் நிலைப்பாடு குறித்து அமைச்சர் ரகுபதி கடிதம் வழங்கி நேரில் தெரிவித்தார்.

தமிழக அரசின் நிலைப்பாட்டைக் கேட்டறிந்த தலைமை நீதிபதி, நீதிமன்றங்களில் எந்த தலைவர்களின் புகைப்படத்தையும் அகற்ற உத்தரவிடப்படவில்லை. தற்போது உள்ள நடைமுறையே தொடரும் எனத் தெரிவித்தார்.

இத்தகவல் வழக்குரைஞர் மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது என அதில் கூறப்பட்டுள்ளது.

கறவை மாடுகளுக்கு செயற்கை கருவூட்டல்: பயிற்சிக்கு ஆவின் நிறுவனம் ஏற்பாடு

சென்னை, ஜூலை 24: ஆவின் நிறுவன பால் உற்பத்தியாளர்களின் நலனுக்காக, கறவை மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆவின் சார்பில் திங்கள்கிழமை வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

ஆவின் நிறுவனத்தில் பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்வதற்காக பயிற்சி பெற்ற ஊழியர்கள் 2,528 பேர் அந்தந்த கிராமப்புற பிரதான பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றி வருகின்றனர். இக் கருவூட்டல் ஊழியர்கள் மூலம் ஆண்டுக்கு ஏறத்தாழ 16.50 லட்சம் செயற்கைமுறை கருவூட்டல்கள் பால்உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு செய்யப்படுகிறது.

இச்செயற்கை முறை கருவூட்டல் வசதிகளை வலுப்படுத்தும் நோக்கில் தற்போது வேலூர், விழுப்புரம், மதுரை, சேலம், திருநெல்வேலி ஆகிய 5 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் உள்ள பயிற்சி நிலையங்களிலும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில், மாதவரத்தில் உள்ள திறன் மேம்பாட்டு மையத்திலும் தற்போது 156 சங்க உறுப்பினர்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த பயிற்சி முகாம் மொத்தம் 90 நாள்கள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி

மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். 58/2023

மதுரை மாநகராட்சி கீழே குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஆணையாளர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

பணியின் பெயர்	ஒப்பந்தபுள்ளிகள் சமர்ப்பிக்கும் நாள்	ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படும் நாள்
TURIP திட்டத்தின்கீழ் ஒரு சிப்பத்தின் மதிப்பு குறைந்தபட்ச மதிப்பு ரூ.18.50/- லட்சம் முதல் அதிகப்பட்சமாக ரூ.166.00/- லட்சம் வரை ஆகும்.	25.07.2023 to 04.08.2023 3.00 pm	04.08.2023 3.30 pm

இதர விபரங்களை http://www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.
E-mail Address : mducorpce@gmail.com Contact No: 0452-2540333
செயதொ(இ)/3987/ஒப்பந்தப்புள்ளி/2023 ஆணையாளர், மதுரை மாநகராட்சி
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

தெற்கு ரயில்வே

பொருட்கள் மேலாண்மை துறை
ஏல விற்பனை நிகழ்ச்சி நிரல்
அறிவிப்பு எண். 09/2023

ஃபெரஸ் ஸ்க்ராப், ஃபெரஸ் அல்லாத ஸ்க்ராப், பிற பல்வகை ஸ்க்ராப்கள், கழிக்குக் கட்டப்பட்ட வேகன், பயணப்பெட்டிகள் மற்றும் வேகோகக்கள், ஸ்க்ராப் செலில்கள் மற்றும் பிற நிராந்தர வழி ஸ்க்ராப் பொருட்களை விற்றுத் தீர்ப்பதற்காக மின்னணு ஏலம் நடத்தப்படும்.

வ. எண்	மின்னணு ஏலத்தை நடத்துபவர்	செப்டம்பர் '23 மாதத்தில் ஏலம் நடத்தப்படும் தேதி அட்டவணை				ஏலத்துக்கான பொருட்கள்
1.	GSD/பெரம்பூர்	01/09/23	08/09/23	15/09/23	29/09/23	மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் பற்றிய விவரங்கள், www.ireps.gov.in - ல் உள்ள ஏலப்பட்டியலில் உள்ளன.
2.	CSSD/பொன்மலை	04/09/23	12/09/23	20/09/23	29/09/23	
3.	SSD/சோத்துப்பூர்	04/09/23	12/09/23	20/09/23	-	
4.	MAS கோட்டம்	05/09/23	13/09/23	21/09/23	29/09/23	
5.	சேலம் கோட்டம்	05/09/23	13/09/23	21/09/23		
6.	திருவனந்தபுரம் கோட்டம்	07/09/23	15/09/23	25/09/23		
7.	பாலக்காடு கோட்டம்	07/09/23	15/09/23	25/09/23		
8.	திருச்சிராப்பள்ளி கோட்டம்	08/09/23	19/09/23	27/09/23	-	
9.	மதுரை கோட்டம்	08/09/23	19/09/23	27/09/23	-	

செப்டம்பர் 23- ல் நடத்தப்படும் மொத்த ஏலங்கள் – 30
குறிப்பு: உபரியாக உள்ள டீசல் வேகோக்கள், " எங்கே உள்ளதோ அப்படியே" என்பதாக ஏலத்தில் விடப்படும்.
விரிவான கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் அறியவும் ஏலப்பட்டியலை பதிவிறக்கம் செய்து கொள்ளவும் பார்வையிடுங்கள் இணையதளம் <http://www.ireps.gov.in> >E-Auction >Sale >Live Auctions
முதன்மை தலைமை பொருட்கள் மேலாளர்
Follow us on : twitter.com/GMSRailways

டிவிஎஸ் மோட்டார் கம்பெனி லிமிடெட் TVS

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006.
இணையதளம் : www.tvsmotor.com தொலைபேசி : (044) 28332115, தொலைநகல் : (044) 28332113 மின்னஞ்சல் : contactus@tvsmotor.com
CIN : L35921TN1992PLC022845

30 ஜூன் 2023 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தனித்த மற்றும் ஒருங்கிணைத்த நிதிநிலை முடிவுகள்

(ரூ. கோடிகளில்)

வ. எண்	விவரங்கள்	தனித்தது			ஒருங்கிணைந்தது		
		முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு	முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு
		30.06.2023	30.06.2022	31.03.2023	30.06.2023	30.06.2022	31.03.2023
		(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)	(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)
1	வியாபார நடவடிக்கைகளின் மூலம் மொத்த வருமானம்	7,275.47	6,030.92	26,478.66	9,142.05	7,347.83	32,111.99
2	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	610.36	432.06	2,003.37	626.53	437.03	1,937.90
3	விதிவிலக்கான வகைகளுக்குப் பின் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	610.36	432.06	2,003.37	626.53	435.96	1,936.03
4	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்)	467.67	320.54	1,491.03	441.47	296.75	1,309.46
5	நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம்]	440.50	295.42	1,463.35	393.67	287.13	1,368.74
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.1/-)	47.51	47.51	47.51	47.51	47.51	47.51
7	ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக)	-	-	6,000.34	-	-	5,457.49
8	பங்கு பிரீமியம் கணக்கு	– பொருந்தாது –					
9	நிகர மதிப்பு	6,478.76	5,123.83	6,038.35	5,631.98	4,628.49	5,422.76
10	நிலுவையில் உள்ள கடன்	2,275.32	1,547.00	2,010.23	21,086.89	15,663.55	19,775.04
11	நிலுவையில் உள்ள திருப்பி எடுக்கக்கூடிய முன்னுரிமை பங்குகள்	– பொருந்தாது –					
12	கடன் சம விகிதாசாரம் (மடங்கு)	0.4	0.3	0.3	3.7	3.3	3.6
13	பங்கு ஒன்றிற்கான சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.1/- ஒரு பங்குக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (அ) அடிப்படை (ரூபாயில்) (ஆ) டைல்யூட்டட் (ரூபாயில்)	9.84 9.84	6.75 6.75	31.38 31.38	9.14 9.14	6.43 6.43	27.97 27.97
14	மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு	– பொருந்தாது –					
15	மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு	– பொருந்தாது –					
16	கடன் சேவை அளிப்பு விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக) (மடங்கு)	1.1	4.3	5.0	0.9	2.4	2.9
17	வட்டி சேவை அளிப்பு விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக) (மடங்கு)	13.9	12.5	15.2	8.1	7.2	8.2
18	நடப்பு விகிதம் (மடங்கு)	0.7	0.6	0.6	1.0	1.0	0.9
19	நீண்ட கால கடன் விகிதம் செயல்பாட்டு மூலதனத்திற்கு (மடங்கு)	-	-	-	2.9	4.2	3.0
20	கணக்குகளின் மூலம் பெறவேண்டியவற்றிற்கு வராக்கடன் விகிதம் (மடங்கு)	-	-	-	-	-	-
21	நடப்பு பொறுப்புகளின் விகிதம் (மடங்கு)	0.7	0.8	0.8	0.6	0.6	0.7
22	மொத்த கடனுக்கு மொத்த சொத்துக்களின் விகிதம் (மடங்கு)	0.2	0.1	0.2	0.6	0.6	0.6
23	கடனாளிகளின் சுழற்சி விகிதம் (மடங்கு)	28.1	22.3	27.4	26.3	22.2	26.5
24	சரக்கிருப்பு சுழற்சி விகிதம் (மடங்கு)	15.5	16.7	17.0	10.7	11.9	11.7
25	செயல்பாட்டு இலாப விகிதம் (%)	10.6	10.0	10.1	9.3	9.1	9.1
26	நிகர இலாப விகிதம் (%)	6.5	5.3	5.7	4.9	4.1	4.1

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் 2015ம் வருடத்தைய செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 33 மற்றும் 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் இணையதளம் (www.bseindia.com மற்றும் www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் www.tvsmotor.com ஆகியவற்றிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
2. முந்தைய காலத்திற்கான தொகைகள் நடப்புக் காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

டிவிஎஸ் மோட்டார் கம்பெனி லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
புரபசர் சர் ரால்ஃப் டீட்டர் ஸ்பெத்
தலைவர்

தேதி : 24.07.2023

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
மண்டல அலுவலகம்-சென்னை-I
அனெக்ஸ் பில்டிங், 3வது தளம்,
763, அண்ணாசாலை, சென்னை - 600 002.

பொது அறிவிப்பு Sale Under SARFAESI Act

11.07.2023 தேதியிட்ட இந்த நாளிதழில் வெளியான எங்களது **அசையா சொத்துக்கள் விற்பனைக்கான அறிவிப்பு** விளம்பரத்தை பார்க்கவும். (ரீடெய்ல் மார்ட் மற்றும் தி.நகர் கிளைகள்) தொழில்நுட்ப காரணங்களினால் 26.07.2023 அன்று நடைபெறவிருக்கும் இ-ஏல விற்பனை ரத்து செய்யப்படுகிறது என இதன்மூலம் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

கடன் வசூல் தீர்ப்பாயம்-II, சென்னை
2வது தளம், அடிஷனல் ஆபீஸ் பில்டிங், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை600 006
T.A. No.789 of 2023

இந்தியன் வங்கி, முன்னர் அலகாபாத் வங்கி, IFSC: ALLA0211042
அதன் சார்பாக முதுநிலை மேலாளர், **அண்ணாநகர் கிளை,** F48, புதிய எண்.54, 1வது அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு, சென்னை-600102 ...மனுதாரர்

-எதிர்-

1.M/s.சூர்யா பிளாஸ்டிக்ஸ், உரிமையாளர் Smt.கீதா கஷ்யாப் ஜெயின், W/o.அஜய் குமார் கஷ்யாப் ஜெயின், PAN No.BBKPG0922R, DOB: 15.03.1976, எண்.1/615, முகப்பேர் மேற்கு, சென்னை-600037
மேலும் முகவரி, எண்.13, II பிளாக், வள்ளியம்மாள் தெரு, முகப்பேர் மேற்கு, சென்னை-600037.
மேலும் முகவரி, எண்.1/615, 1வது பிளாக், D.R.சூப்பர் மார்கெட் அருகில், முகப்பேர் மேற்கு, சென்னை-600037.
2.Smt.எஸ்தர் பாய், W/o.வின்சென்ட், ஆதார் எண்.6094 0890 7533, DOB:05.05.1951, எண்.6/715, முகப்பேர் மேற்கு, சென்னை-600037.
மேலும் முகவரி, எண்.13/71, இடைக்குமம் வார்டு, காமராஜ் நகர், குமித்துறை, விளவங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம் - 629163
3. Mr.அஜய் குமார் கஷ்யாப் ஜெயின், S/o.ஜகபதி தாஸ் ஜெயின், DOB: 05.01.1969, எண்.1/615, 1வது பிளாக், D.R.சூப்பர் மார்கெட் அருகில், முகப்பேர் மேற்கு, சென்னை-600037.
...பிரதிவாதிகள்

அறிவிப்பு

இந்தியன் வங்கி, அண்ணாநகர் கிளை, அண்ணாநகர் கிழக்கு, சென்னை-600102 மேற்குறிப்பிட்ட **பரிமாற்ற வினண்ணப்பம் எண்.789/2023-ஐ** மேற்கண்ட பிரதிவாதிகளுக்கு எதிராக மாண்புமிகு தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்ததையடுத்து, **17.07.2023** அன்று விசாரணைக்கு வந்தது என்பதை கவனத்தில் கொள்ளவும். மாண்புமிகு தீர்ப்பாயம் **14.08.2023** அன்று 1வது பிரதிவாதியை **மேற்கண்ட TA வழக்கு** ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளது.

எனவே, நீங்கள் மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம்-II, 6வது தளம், அடிஷனல் ஆபீஸ் பில்டிங், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600006 முன்னிலையில் **14.08.2023** அன்று காலை **11.30** மணிக்கு நேரிலோ அல்லது முறையான அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறினால் நீங்கள் இல்லாமலே வழக்கு விசாரிக்கப்பட்டு ஒரு தலைப்சமாக முடிவு எடுக்கப்படும்.

S. பாண்டுரங்கன்,
மனுதாரரின் வழக்கறிஞர்
245/5, ரோகிணி பிளாட்ஸ், அண்ணாநகர் மேற்கு விரிவு, சென்னை-600 101.
மொபைல்: 98840 36374

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

SUNDARAM HOME

பதிவு அலுவலகம்: எண்.21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை-600002.
பெருநிறுவன அலுவலகம்: சுந்தரம் டவர்ஸ், எண்.46, ஓயிட்ஸ் சாலை, சென்னை-600014.
கிளை அலுவலகம்: எண். 302, 2வது தளம், SAM வளாகம், KSR நகர், MTH சாலை, அம்பத்தூர், சென்னை-600053. தொலைபேசி: 044 - 26521656 / 26231656.

சுவாதீன அறிவிப்பு

சட்டம் பிரிவு 13(4) மற்றும் பிற்சேர்க்கை IV மற்றும் 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(1)-ன் கீழ்

கீழே கையொப்பமிட்டுள்ளவர், சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிட்-ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை நெருக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் (விதிகள்) கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கணக்கு எண். AMB20160149-ல் கடன்தாரர் திரு. மணிபாலன் R இணை கடன்தாரர்கள் திருமதி. ஷாலினி M அவர்களுக்கு சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் 20-04-2023 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) அனுப்பி, அந்த அறிவிப்பு பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், அதில் காணும் தொகை ரூ.37,62,222/- (ரூபாய் முப்பத்தேழு லட்சத்து அறுபத்திரண்டாயிரத்து இருநூற்று இருபத்திரண்டு மட்டும்) மற்றும் எதிர்கால வட்டி+ சட்ட்பபியான செலவினங்கள் + சட்டபூர்வ செலவுகள்+ எதிர்பாரா கட்டணங்கள் ஆகியவற்றைச் சேர்த்துச் செலுத்துமாறு கோரப்பட்டது.

ஆனால், கடன்தாரர் / கூட்டுக்-கடன்தாரர், கடன் பாக்கியை முழுவதுமாகச் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்களுக்கும் / கூட்டுக் கடன்தாரர்களுக்கும் / பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை 24.07.2023 அன்று வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது சுவாதீனத்தில் (POSSESSION) எடுத்துக் கொண்டுள்ளார்.

கடனுக்கு ஈடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் தொடர்பான மேற்படி சட்டம் பிரிவு 13, உட்பிரிவு (8)-ன் வரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கூட்டுக்கடன்தாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, முக்கியமாக கடன்தாரர்களுக்கும்/கூட்டுக் கடன்தாரர்களுக்கும், பொது மக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாத